காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி அவை தலைவர் ஆர் சுந்தர்ராஜன் தலைமையில் பகுதி செயலாளர் என். சந்திரன் எம்.சி. ஏற்பாட்டில் நங்கநல்லூரில் 4.8.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் பகுதிச் செயலாளர் ப.குணாளன், எம்.எஸ்.கே. இப்ராஹிம், கோல்டு டி. பிரகாஷ், கே.ஆர்.ஆனந்தன், ஏ.சாலமோன் எம்.சி, ஆர்.பாபு, இ.ரமேஷ், ராஜேஸ்வரி சத்யா, ஜெ.நடராஜன், டி.ஏசுதாஸ், இ.உலகநாதன், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், ஏ.வேலவன், ஏ.ஆர்.சரவணா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

சென்னை அரசு மனநல மருத்துவமனையில்

ரூ 42 கோடியில் மனநலம் - நரம்பியல் ஒப்புயர்வு மையம் கட்டுமானப் பணி!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தனர்!

சென்னை, ஆக.5-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (04.08.2025) சென்னை, அரசு மனநல மருத்துவமனையில், ரூ.40.5 கோடி மதிப்பீட்டில் தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். பிறகு ரூ.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ள மனநலம் மற்றும் நரம்பியல் ஒப்புயர்வு மையம் கட்டுமானப் பணியினை ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்விற்கு பிறகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

மனநலம் மற்றும் நரம்பியல் ஒப்புயர்வு மையம்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் சென்னை அரசு மனநல மருத்துவமனையில் இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, குறிப்பாக முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளின் காரணமாக, பல்வேறு புதிய மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில் முதலமைச்சர் அவர்கள் இடைநிலை பராமரிப்பு மையத்தினை ஏற்கெனவே திறந்து வைத்திருக்கிறார்கள். காந்த சக்தி மூலம் மூளையினைத் தூண்டும் நவீன சிகிச்சை முறையினை இங்கே தொடங்கி வைத்தார்கள். அதோடுமட்டுமல்லாமல் ரூ.42 கோடி செலவில் 88,000 சதுர அடி பரப்பில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கூடிய புதிய கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார் முதலமைச்சர் அவர்கள். இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பெருமதிப்பிற்குரிய வெற்றியழகன் அவர்கள் சட்டமன்றத்தில் அவர் உறுப்பினராக ஆனபிறகு அவர் வைத்த கோரிக்கை சென்னை அரசு மனநல மருத்துவமனை தரம் உயர்த்திட வேண்டும் எனவும், எதிர்காலத்தில் பல்வேறு வகைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அவருடைய கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதன்முறையாக மிகப்பெரிய அளவில் ரூ.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 240 படுக்கைகள் கொண்ட புதிய கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டினார்கள். அந்தப் பணி தற்போது முழுமையாக நிறைவுற்றிருக்கிறது. ரூ.37 கோடி செலவிலான கட்டிடப் பணிகள் முழுமைப் பெற்றிருக்கும் நிலையில் ரூ.5 கோடி செலவிலான மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு 30 நாட்களில் பொதுப்பணித்துறை நிர்வாகம் அந்தப் பணிகளை செய்து முடித்தபிறகு இந்தக் கட்டிடம் முழு பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது. இதில் ஒவ்வொரு தளத்திலும் பல்வேறு வகைகளில் மனநோயினால் பாதிக்கப்பட்ட மருத்துவப் பயனாளர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கிறது.

தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம்

இந்த மருத்துவமனையில் ஏற்கெனவே ரூ.4.62 கோடி மதிப்பீட்டில் மனநல மருத்துவமனையின் பாரம்பரிய கட்டிடமாக கருதப்பட்ட மனமகிழ் மன்றம் கட்டிடம் புனரமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் முதன்முறையாக மனநோயாளர்களுக்கு காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 520 நபர்களுக்கு சிறப்பு அங்கீகாரம் வழங்கி முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டத்தின் கீழ் அவர்களுக்கு அட்டைகள் வழங்கப்பட்டது. அதன்தொடர்ச்சியான இந்த மருத்துவமனையில் தொடர்ந்து பயன்பெறுகின்ற 850க்கும் மேற்பட்ட மருத்துவ பயனாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் பயன்பாட்டில் இருக்கின்றது. இந்தியாவில் இருக்கின்ற அரசு மருத்துவமனைகளில் மனநலன் பாதிக்கப்பட்ட மருத்துவ பயனாளர்களுக்கும் காப்பீடு திட்டத்தின் கீழ் பயன்பெறுவது என்பது முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு இந்த மருத்துவமனையில்தான். அந்தவகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில் இன்னமும் கூடுதலாக இந்த மருத்துவமனையில் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்தும் முயற்சியாக கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.34 கோடி செலவில் 330 படுக்கைகள் வசதிகள் கொண்ட இன்னொரு கட்டிடம் அதில் 100 தீவிர சிகிச்சை பிரிவுக்கான மருத்துவக் கட்டிடம், 220 மற்ற சாதாரண படுக்கை வசதிகள் கொண்ட கட்டிடம் என்று 330 படுக்கை வசதிகள் கொண்ட 3 பிளாக்குகள் கட்டும் பணி தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் முடிவுற்ற பிறகு இந்த மருத்துவமனையில் மட்டும் 570 படுக்கை வசதிகளோடு புதிய கட்டிடத்திலேயே மருத்துவ பயனாளர்கள் பயன்பெற இருக்கிறார்கள். மிக மிக பழமையான பாரம்பரியமான வசதிகளை கொண்ட இந்த மருத்துவமனையின் புதிய மருத்துவக் கட்டமைப்புகளும் பல்வேறு வகைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையில் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படவிருக்கிறது. *Tamilnadu Institution of Mental Health and Neuron Sciences* என்கின்ற வகையில் இந்தக் கட்டிடம் மிகப்பெரிய அளவில் பயனுள்ளதாக அமையவுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மனநலன் பாதித்தவர்களுக்கு பல்வேறு வகைகளில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மாணவர்களுக்கு பல்வேறு வகைகளில் வழிகாட்டுதலை செய்வதற்கு மனநலன் நல்லாதரவு மன்றம் என்கின்ற வகையில் பல்வேறு கட்டமைப்புகள் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஆலோசனைகள் வழங்குவதற்கு 104 என்னும் தொலைபேசி எண் வழங்கி அதிலும் 20க்கும் மேற்பட்ட மனநல ஆலோசகர்கள் தினமும் தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தும் யாருக்கு என்ன ஆலோசனைகள் வேண்டும் என்றாலும் அதையும் தொடர்ச்சியாக வழங்கி வருகிறார்கள். அந்தவகையில் இன்றைக்கு சென்னை அரசு மனநல மருத்துவமனையில் நரம்பியல் மற்றும் ஒப்புயர்வு மைய கட்டிடம் மிகப் பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இக்கட்டிடம் விரைவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மருத்துவப் பயனாளர்களின் பயன்பாட்டிற்கு வர உள்ளது.

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் தொடர்பான கேள்விக்கு

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமில் தொடங்கப்பட்ட ஒரே நாளில் 44,418 பேர் பயன்பெற்று இருக்கிறார்கள். 38 மாவட்டங்களில் நடைபெற்றுள்ளது. வரும் சனிக்கிழமை 37 மாவட்டங்களில் நடத்தப்பட உள்ளது. ஏற்கெனவே 388 பிளாக்குகளில் பிளாக்கிற்கு 3 என்கின்ற வகையில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் குறைவான 19 மாநகராட்சிகளில் தலா 3 என்கின்ற வகையிலும் 1256 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. இது 6 மாதங்களின் அவகாசத்திற்குள் நடத்தப்படும். வாரத்திற்கு 38 முகாம் என்று திட்டமிடப்பட்டது. சென்னையைப் பொறுத்தவரை 15 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முகாம்கள் வரும் வாரம் 37 முகாம்கள் நடத்தப்படும். அதற்கு அடுத்த வாரம் 38 முகாம்கள் நடக்கும். ஒவ்வொரு மாவட்ட வருவாய் மையங்களிலும் முகாம்கள் நடத்தப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றியழகன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், அரசு மனநல மருத்துவமனை இயக்குநர் மரு.மாலையப்பன், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் மணிகண்டன், கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் கோவிந்தராஜீலு மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

கலைஞர் நினைவு நாள்: கழக தலைவர் தலைமையில் அமைதி பேரணி!

சென்னை தென்மேற்கு மாவட்ட கழகத்தினர் அலைக்கடலென திரண்டுவாரீர் !

மாவட்ட செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை,ஆக.6-

வருகின்ற 07ஆம் தேதி காலை முதல்வர் கழகதலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் கலைஞர் நினைவு நாள் அமைதி பேரணியில் தென்சென்னை மாவட்ட கழகத்தினர் அலைக்கடலென திரண்டுவாரீர் என்று மாவட்ட செயலாளர் மயிலை.த.வேலு.எம்.எல்ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை

தமிழே உயிராக தமிழர் வாழ்வின் மூட்சாக வாழ்வாக கொண்ட மக்கள் மனதில் நிறைந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மறைந்து 7ஆண்டுகாலம் சென்றாலும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இன்றும் நினைவில் இருக்கிறார்.

அறைநூற்றாண்டு காலம் கழகத்திற்குதலைமை தாங்கியும், ஐந்துமுறை தமிழ்நாட்டிற்கு முதலமைச்சராகவும், தமிழ் நாட்டை கட்டி எழுப்பிய நவீன சிற்ப்பி அவர்.

அத்தகைய சிறப்புகளை பெற்ற மக்கள் போற்றி வழங்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவுநாள் ஆன ஆகஸ்ட் 7 ஆம் தேதி அன்பு தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அமைதி பேரணி நடைபெறுகிறது.

கழகதலைவர் அன்பு தளபதி அவர்களின் கட்டளையை ஏற்று ஆகஸ்ட் 7 ஆம் தேதி நடைபெறும் அமைதிபேரணியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நினைவிடம் நோக்கி அமைதி பேரணியில், தென்மேற்கு மாவட்ட நிர்வாகிகள், உடன்பிறப்புகள் அனைவரும் அலைக்கடலென திரண்டு வந்து அன்பான தலைவருக்கு வணக்கத்தை செலுத்துவோம் என்று அன்போடு அழைக்கிறோம்.

அத்துடன் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்கள் தோறும் திருவுருவ படத்திற்கு மலர் தூவி வணக்கம் செலுத்திடுவோம் என்று மாவட்ட செயலாளர் மயிலை. த.வேலு எம்.எல்.ஏ அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

கோடம்பாக்கம் மு. சத்யா ஏற்பாட்டில் நா.மோ.முரளி முன்னிலையில்

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்! உணவு வழங்கல் !

மயிலை த.வேலு, தமிழச்சி தங்கபாண்டியன்,ஜெ.கருணாநிதி பங்கேற்பு!

சென்னை ஆக.6

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

கோடம்பாக்கம் மு.சத்யா ஏற்பாட்டில் 500 நபர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.இதில்

மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ பங்கேற்கிறார்.

வட்டக் கழக செயலாளர் நா.மோ முரளி முன்னிலை வகிக்கிறார். இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ,பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்சி பங்கேற்கின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம்,மாவட்ட துணை செயலாளர் கோடம்பாக்கம் மு. சத்யா ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு 500 நபர்களுக்கு உணவு வழங்குதல் காமராஜர் காலனி 3வது தெரு கலைஞர் இலவச இ.சேவை மையம் அருகில் நாளை 7.08.2025 மதியம் 12.மணியளவில் நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி,பகுதி செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ,பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, எஸ்.மோகன், கோ.சு.மணி, மாம்பலம் சந்திரசேகர்,நந்தனம் வேதா,கே.மலர்,ராஜா அன்பழகன், கார்த்திகா பாஸ்கர், கே.எஸ்.வெல்டிங் ராஜா,புலியூர் டி.மோசஸ், உமா.சங்கர், அஸ்வின் குமார்,மு. பாலகுரு,எஸ். கே.நசீர்,சா.தேவராசு சி.சங்கர் எம்.ராமச்சந்திரன்,எம். சேகர்,பிரஸ் கோவிந்த்,எம். குப்பம்மாள்,காலனி பி.வேலு,தேவராஜ், எஸ். ரஜினி,பி.சுந்தர், எஸ்.விஜயன், ஒய்.எட்வின், டி.ராஜசேகர், ஆனந்தராஜ், மங்கள்ராஜ், சாந்தி, பிரேமா,மாரியம்மா, கலையரசன்,சசி, வசந்த்,கலையரசன், பிரசாந்த்,உதயநிதி, விக்னேஷ்,ஏ. தங்கராஜ் பங்கேற்கின்றனர்.

செயல் ஜெயக்குமார்,மாசீனிவாசன்,பா.சங்கர், து.விவேக் நன்றி உரையாற்றுகின்றனர் .

தி.மு.க. மீனவர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மீனவர் அணி அணியின் **விழுப்புரம் மத்திய, திருப்பூர் மத்திய, ஈரோடு மத்திய** ஆகிய மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

விழுப்புரம் மத்திய மாவட்டம்

தலைவர் - எம். ராஜா 3, அங்காளம்மன் கோயில் தெரு, விழுப்புரம்.

துணைத் தலைவர் - வி. ராஜேந்திரன் முத்துமாரியம்மன் கோயில் தெரு, மீனவர் வீதி, பொம்மையார்பாளையம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - வி. மணி தந்திராயன் குப்பம், கோட்டக்குப்பம் நகராட்சி, வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜெ. செந்தமிழ்செல்வன் 54, முருகன் கோயில் தெரு, பிள்ளைச்சாவடி, வானூர் வட்டம், விழுப்புரம். 2) எம். கொளஞ்சியப்பன் 56, இ.பி. தெரு, சாலமேடு, விழுப்புரம். 3) எம்.கே. கார்த்தி குப்புசாமி முதலியார் தெரு, வி. மருதூர், விழுப்புரம். 4) எ.கே. வீரப்பன் 12, செங்கணியம்மன் கோயில் தெரு, சின்னமுதலியார் சாவடி, கோட்டக்குப்பம் நகராட்சி, வானூர் வட்டம், விழுப்புரம். 5) தெ. சுந்தரபாண்டியன் 2, செந்தில் நகர், சித்தேரிக்கரை, விழுப்புரம் - 605605.

திருப்பூர் மத்திய மாவட்டம்

தலைவர் - நா. கருணாகரன் 11, பல்லடம் ரோடு, காட்டுவளவு மெயின் வீதி, தென்னம்பாளையம், திருப்பூர் - 641604.

துணைத் தலைவர் - அ. ரஹமத்துல்லா 75கே/69ஏ, செம்மேடு தோட்டம், பள்ளிவாசல் வீதி, திருப்பூர் - 641604.

அமைப்பாளர் - மு. நந்தகோபால் 23, சித்ரகார் நகர், திருப்பூர் - 641604.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. விஸ்வநாதன் 9/1, கோபால் நகர் 2வது வீதி, கருவம்பாளையம், திருப்பூர் - 641604. 2) ஆ. சுதாகர் 258, ஜெய் நகர் 3வது வீதி, திருப்பூர் - 641606. 3) சு. வடிவேல் 1-4, புளியமரத்தோட்டம், கள்ளம்பாளையம், பல்லடம், திருப்பூர்.

4) மு. அபுதாஹீர் 31/351, எம்.என்.ஆர். லைன், பெரியகடை வீதி, திருப்பூர் - 641604. 5) சு. சம்பத்குமார் 31, கரட்டாங்காடு 3வது வீதி, தாராபுரம் ரோடு, திருப்பூர் - 641604.

ஈரோடு மத்திய மாவட்டம்

தலைவர் - கே. சிங்காரவேலு 34, திருவள்ளுவர் நகர், பவானி - 638301, ஈரோடு மாவட்டம்.

துணைத் தலைவர் - தி. செல்வராஜ் 5/273, பாச்சாங்காட்டுபாளையம், செங்கப்பள்ளி, ஊத்துக்குளி, ஈரோடு.

அமைப்பாளர் - கே.இ. தண்டபாணி மேட்டூர் மெயின் ரோடு, குருப்பநாயக்கன்பாளையம், பவானி, ஈரோடு.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். பிரகாஷ் 60/86, தந்தை பெரியார் வீதி, பவானி, ஈரோடு. 2) எஸ்.கே. பழனிச்சாமி 4/127, சாமியார் பாளையம் தெரு, பல்லகவுண்டன்பாளையம், ஈரோடு. 3) ர. நடராஜ் அக்கறையாம்பாளையம், வாய்ப்பாடி, சென்னிமலை, ஈரோடு. 4) பி. வீரப்பன் நாகிரெட்டிபாளையம், முகாசிப்புதூர், பவானி - 638314, ஈரோடு.

5) எம். முத்துகுமார் 1/358, சேரன் நகர், மேட்டுப்புதூர், விஜயமங்கலம், ஈரோடு.

"அண்ணா அறிவாலயம்" **டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**
சென்னை – 18. **செயலாளர்**
நாள் 05–08–2025. **தி.மு.க. மீனவர் அணி.**

பெரம்பூர் வடக்கு பகுதியில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவு நாள்!

பகுதிச் செயலாளர் அ.முருகன் வேண்டுகோள்!

சென்னை,ஆக.6-

ஆகஸ்ட் 7ஆம் தேதி வியாழக்கிழமை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் திராவிட இயக்கத்தின் கழகத்தின் பாதுகாவலராக ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராக பன்முக தலைவர் செம்மொழி நாயகராக நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் நம் குடும்பத் தலைவரின் நினைவு நாள் தமிழே மூச்சாகவும் , தமிழர் நலமே வாழ்வாகக் கொண்டு இன உணர்வு மொழி உணர்வு சமூக நீதி தீண்டாமை ஒழிப்பு பெண்கள் முன்னேற்றம் சாதி ஒழிப்பு என வரலாற்றின் பொது வாழ்வில் உலகளவில் அனைவருக்கும் முன் உதாரணமாக திகழ்ந்த நம் குடும்பத் தலைவருக்கு நினைவு நாள்

கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைப்படி மாவட்ட பொறுப்பாளர் அறிவுறுத்தலின்படி பெரம்பூர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட ஆறு வட்டங்களில் உள்ள வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் இல்லத்தில் வாயிலில் பொது இடங்களில் பொதுமக்கள் கூடும் இடங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்தை வைத்து மாலை சூடி மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்திட வேண்டும் மேலும் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட நிர்வாகிகள் வட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக மாவட்ட பொறுப்பாளர் தலைமையில் எம்சி ரோட்டில் அமைந்துள்ள கலைஞர் சிலைக்கு காலை 6 மணி அளவில் மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியிலும் தலைவர் தளபதி தலைமையிலான நடைபெறும் அமைதிப் பேரிலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி செயலாளர் அ.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தி.மு.க. மீனவர் அணி

கரூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மீனவர் அணி அணியின் கரூர் மாவட்டம் - கரூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

கரூர் மாவட்டம்

கரூர் மாநகரம்

அமைப்பாளர் - எஸ். சந்திரகுமார், 41ஏ, கோல்டன் சிட்டி, ஆர்.டி.ஓ. ஆபீஸ் பின்புறம், கலெக்டர் ஆபீஸ் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639007

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். ராஜேந்திரன், 11 - கே.எஸ். பி. தெரு, வெங்கமேடு அஞ்சல் கரூர் தாலுக்கா, கரூர் - 639006 2) பி. கணேசன், 59ஏ, வெங்க்கல்பட்டி, கலெக்டர் அபீஸ் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639007 3) எம். மகாமுனி, முதல் கிழக்கு தெரு, திருமாநிலையூர், திருமாநிலையூர் அஞ்சல், கரூர் மாவட்டம்-639005 4) அ.அறிவழகன் (எ) சூளக் குமார், 177, முதல் கிழக்கு தெரு, திருமாநிலையூர், திருமாநிலையூர் அஞ்சல் கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639003 5) எஸ். மோகன், 42பி, இந்திரா நகர், தெற்கு காந்தி கிராமம், பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் மாவட்டம் - 639004 6) வி. வேல்முருகன், 39,பூங்கா நகர், தாந்தோணி மலை, தாந்தோணி மலை அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் : 639005

"அண்ணா அறிவாலயம்" **டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்**
சென்னை – 18. **செயலாளர்**
நாள் 05–08–2025. **தி.மு.க. மீனவர் அணி.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு–127, சின்மயா நகர் பாலப் பகுதியில் உள்ள விருகம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை நேற்று (05.08.2025) மேயர் திருமதி ஆர்.பிரியா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் பொ.லோகு, திருமதி ஆர். ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட

பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை வடகிழக்கு மாவட்டம் பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம், மாவட்டக் கழக அவைத் தலைவர் குறிஞ்சி S.கணேசன் அவர்கள் தலைமையில், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ முன்னிலையில் இன்று 06.08.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் மாதவரம் VRD நகரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

மேற்படி கூட்டத்தில் மாவட்டத்தில் அடங்கிய மாநில நிர்வாகிகள், முன்னாள், இன்னாள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாதவரம் தொகுதி பார்வையாளர் மற்றும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக, ஒன்றிய கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாள் - அமைதிப்பேரணி
2. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தல்.
3. உங்களுடன் ஸ்டாலின் முகாம்.
4. கழக ஆக்கப் பணிகள்

மாதவரம் **எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

சென்னை மேற்கு மாவட்டக் கழக மாணவர் அணி ஆலோசனை கூட்டம் நேற்று (05.8.2025) மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் தலைமையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் குறித்து அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் உரையாற்றினார். இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பி.ஜே.ஓம்குமார், முனைவர் கெ.ஜெகதீசன், அ.கார்த்திக், ஞா.பிரசன்ன ராஜகுமாரி, கு.ஸ்ரீராம், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.